1987 மார்ச் 27]

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே உள்ள பெரிய தாலுகாக்களை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசின் ஆய்வில் உள்ளதா? அதேபோல் சைதை தாலுகா மிகப் பெரிய தாலுகா வாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பெரிய தாலுகாக்களை இரண்டாகப் பிரிக்கின்ற குறிப்புகள் எதுவும் இல்லை. குறிப்பாக சில தாலுகாக்களை அவை பெரிதாக இருக்கின்ற தன்மையைக் கருதி, நிர்வாக வசதியைக் கருதி அவ்வப்போது பிரித்துக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் அண்மையில் 25, 30 தாலுகாக்கள் உருப்பெற்று எழுந்திருக்கின்றன.

வன, மீனளத் துறையை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

198—(*வினா எண். 10584) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகத்தில் வன, மீனளத் துறையை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் வனம் மற்றும் மீன் துறையை இரண்டாகப் பிரிப்பது பற்றிய பலாபலன்கள் அரசால் ஆராயப்பட்டு வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

292—(*வினா எண். 12476) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?